

நெல்லை மாவட்டம் சேரன்மகாதேவி ஸ்காட் பொறியியல் கல்லூரி வளாகத்தில் வேளாண்மை பொறியியல் துறை சார்பில் வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகளின் செயல்பாடு மற்றும் பராமரிப்பு குறித்து மாவட்ட அளவிலான சிறப்பு முகாம் நிகழ்வில் சட்டப்பேரவை தலைவர் மு.அப்பாவு பங்கேற்று மாவட்ட ஆட்சியர் மரு. இரா.சுகுமார் முன்னிலையில் இயந்திரத்தினை துவக்கி வைத்து பார்வையிட்டார்.



தென்காசி மாவட்டம் குற்றாலம், ஐந்தருவி சாலைகளில் உள்ள வெண்ணமடை குளத்தில் படகு சவாரி துவக்க விழா நிகழ்வில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன் பங்கேற்று சுற்றுலா பயணிகள் படகு சவாரியை கொடியசைத்து துவக்கி வைத்தார்.உடன் மாவட்ட ஆட்சியர் ஏ.கே.கமல் கிஷோர், தென்காசி நாடாளுமன்ற உறுப்பினர் மரு. ராணி ஸ்ரீ குமார்,தென்காசி தெற்கு மாவட்ட பொறுப்பாளர் ஜெயபாலன், வடக்கு மாவட்ட செயலாளர் ராஜா.எம். எல். ஏ. மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அரவிந்த்,ஒன்றிய குழு தலைவர் ஷேக் அப்துல்லா உள்பட அரசு அலுவலர்கள் கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர் .



விருதுநகர் மாவட்டம் அருப்புக்கோட்டை வட்டம் கட்டங்குடி ஊராட்சியில் சின்ன கட்டங்குடி பகுதியில் புதிய நியாய விலைக் கடை அடிக்கல் நாட்டு விழாவினை வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை கே கே எஸ் எஸ் ஆர் ராமச்சந்திரன் திறந்து வைத்தார். உடன் முன்னாள் சேர்மன் சுப்பாராஜா, அருப்புக்கோட்டை நகரச் செயலாளர் ஏ.கே.மணி, ஒன்றிய செயலாளர்கள் பாலகணேஷன், பொன்ராஜ் ஆகியோர் கலந்து கொண்டனர்.



விருதுநகர் மாவட்டம் , காரியாபட்டியில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் சார்பில் , காரியாபட்டி, நரிக்குடி, திருச்சுழி ஆகிய வட்டாரங்களைச் சேர்ந்த 103 மகளிர் சுய உதவிக்குழுக்களை சேர்ந்த 1045 மகளிர்களுக்கு ரூ. 40.9 கோடி மதிப்பிலான வங்கி கடனுதவிகள் வழங்கும் விழாவில் அமைக்கப்பட்டுயிருந்த கண்காட்சியினை நிதி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு பார்வையிட்டார். உடன் காரியாபட்டி நகரச் செயலாளர் செந்தில், ஒன்றிய செயலாளர்கள் கண்ணன், செல்வம், தலைமை செயற்குழு உறுப்பினர் தங்கத் தமிழ்வாணன் ஆகியோர் கலந்து கொண்டனர்.



மதுரை தெற்கு மாவட்டம் திருமங்கலத்தில் நடைபெற்ற திருமங்கலம் தொகுதி ஓரணியில் தமிழ்நாடு உறுப்பினர் சேர்க்கை செயல் விளக்க கூட்டத்தில் புதிய உறுப்பினர் சேர்க்கைக்காண படிவங்களை மாவட்டச் செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன் தொகுதி பொறுப்பாளர் டிஸ்கோ அலாவுதீன் முன்னிலையில் ஒன்றிய செயலாளர் மதன்குமாரிடம் வழங்கினார். உடன் கழக நிர்வாகிகள் நாகராஜன், லதா அதியமான், ஸ்ரீதர், ராமமூர்த்தி, தங்கபாண்டியன், செல்லம்பட்டி முத்துராமன், ஜெயச்சந்திரன், சண்முகம், சிவமுருகன், வழக்கறிஞர் சிவனேசன் மற்றும் திரளான கழக நிர்வாகிகள், கழகத்தினர், வாக்குச்சாவடி பாக முகவர்கள் பங்கேற்றனர்.

## தூத்துக்குடி மாவட்டம் - திருச்செந்தூர்

# சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் குடமுழுக்கு முன்னேற்பாடு பணிகள்!

## கனிமொழி கருணாநிதி எம்.பி. – அமைச்சர்கள் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன் – பி.கே.சேகர்பாபு ஆய்வு!

சென்னை, ஜூன் 30-

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, கழக துணைப் பொதுச் செயலாளர் தூத்துக்குடி நாடாளு மன்ற உறுப்பினர் கனிமொழி கருணாநிதி மீன் வளம், மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு ஆகியோர் நேற்று முன்தினம் (28.06.2025) தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூர், சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலில் நடைபெற்று வரும் திருப்பணிகள் மற்றும் வருகின்ற ஜூலை 7 அன்று நடைபெற உள்ள குடமுழுக்கு நன்னீராட்டுப் பெருவிழாவிற்கான முன்னேற்பாடு பணிகளை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்து அலுவலர்கள் மற்றும் பொறியாளர்களுக்கு அறிவுரைகளை வழங்கினர்.

பின்னர் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:-

திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் குடமுழுக்கு பெருவிழாவை மிக சிறப்பான முறையில் நடத்திட இந்த மாவட்டத்தின் அமைச்சர் அனிதா ராதாகிருஷ்ணன் அவர்களும், நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி கனிமொழி அவர்களும் எங்கள் துறையின் செயலாளர், இந்து சமய அறநிலையத்துறை ஆணையாளர், மாவட்ட ஆட்சித் தலைவர், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் மற்றும் அலுவலர்கள் முழு வேகத்தோடு பணியில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றார்கள்.

குடமுழுக்கில் பங்கேற்றும் வகையில் திருக்கோயிலின் முதல் தளத்தில் அனுமதிக்கும் பக்தர்களின் எண்ணிக்கை குறித்து வரும் இரண்டாம் தேதி இறுதி முடிவு எடுக்கப்படும். வருகின்ற ஜூலை 1 அன்று மாலை தொடங்கும் யாகசாலையின் வேள்வி நிகழ்ச்சியில் பங்கேற்க உள்ளோம், குடமுழுக்கிற்கு வருகை தரும் பக்தர்களுக்கு தேவையான குடிநீர், கழிப்பிட வசதி, மருத்துவ வசதி குறித்தும், கடற்கரை மட்டுமல்லாது சுற்றுபிரகாரத்தில் எங்கிருந்து பார்த்தாலும் குடமுழுக்கை காண்கின்ற வகையில் அதிக எண்ணிக்கையில் எல்இடி திரைகள் அமைத்தல், போதிய மின் விளக்குகள், அத்தியாவசிய பொருட்கள் கிடைக்கும் வகையிலான ஏற்பாடுகள், திருக்கோயில் மற்றும் உபயதாரர்கள் சார்பில் அன்னதானம் வழங்கும் இடங்கள், உணவு சமைக்கும் கூடம், குடமுழுக்கு அன்று புனித நீர் தெளிக்க மேற்கொள்ளப்பட்டுள்ள ட்ரோன் வசதிகள், பாதுகாப்பு ஏற்பாடுகள், தீயணைப்பு வாகன வசதிகள், ஆம்புலன்ஸ் வசதிகள் போன்றவை குறித்து விரிவாக ஆலோசித்தோம். அவை அதிக அளவில் ஏற்பாடு செய்யப்பட உள்ளன.

ஆகவே இந்த குடமுழுக்கை பொறுத்தளவில் எல்லா வகையிலும் பக்தர்களின் வசதிக்கேற்ப, சிறப்போடு எந்தவிதமான சிறு அசம்பாவிதமும் நிகழாமல் தேவையான முன்னேற்பாடு மற்றும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ள முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்.

இத்திருக்கோயில் பிரகாரத்திற்கு உள்ளே நடைபெறுகின்ற பணிகள் எதுவாக இருந்தாலும் விரைந்து மேற்கொள்ளப்பட்டு முடித்து தரப்படும். திருக்கோயிலுக்கு வெளியே உள்ள பணிகளான அணுகு சாலைகள், தேசிய நெடுஞ்சாலைகள், நெடுஞ்சாலைத் துறை சார்ந்த பணிகள், உள்ளாட்சித் துறை சார்ந்த பணிகள் அனைத்திற்கும் போதுமான அளவு நிதியினை ஒதுக்கி தந்து, அந்த பணிகள் அனைத்தையும் குடமுழுக்கிற்கு முன்பாக முடித்து தர சம்மந்தப்பட்ட துறைகளுக்கு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்.

ஒட்டுமொத்தமாக அனைத்து பணிகளும் வரும் ஐந்தாம் தேதிக்கு முன்பாக முடிப்பதற்கு திட்டமிட்டு இருக்கின்றோம். ஒளிவு மறைவு இல்லாமல் ஊடகத்துறை நண்பர்கள் அனைவரையும் அழைத்துச் சென்று பணிகளை பார்வையிட்டோம். இதுவரை 90 சதவீதத்திற்கு மேற்பட்ட பணிகள் முடிவுற்று இறுதி கட்டத்தை நெருங்கிக் கொண்டிருக்கிறது. திருச்செந்தூர் குடமுழுக்கு விழா எல்லா வகையிலும் சிறப்பாக அமையும் என்று தெரிவித்தார்.

இந்த ஆய்வின்போது இந்து சமய அறநிலையத் துறை ஆணையர் பி.என். ஸ்ரீதர், தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் க.இளம்பகவத், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஆல்பர்ட் ஜான், திருக்கோயில் தக்கார் ஆர். அருள் முருகன், தலைமையிட கண்காணிப்பு பொறியாளர் செல்வராஜ், இணை ஆணையர்கள் எம். அன்புமணி, எஸ்.ஞானசேகரன், திருச்செந்தூர் வருவாய் கோட்டாட்சியர் சுகு மாறன், காவல் துணை கண்காணிப்பாளர் மகேஷ்குமார், வட்டாட்சியர் பாலசுந்தரம் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



# தி.மு.க. இளைஞர் அணி

## முத்தமிழறிஞர் கலைஞரின் பிறந்த நாள் & திராவிட மாடல் அரசின் நான்காண்டு சாதனை விளக்க தெருமுனைக் கூட்டங்கள்!

### திருவாரூர் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் பனங்குடி ஏ.எஸ்.குமார் அறிவிப்பு!

கழக இளைஞர் அணியின் மாவட்ட – மாநகர – மாநில அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின்படியும் கழக இளைஞர் அணிச் செயலாளர் மாண்புமிகு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் முரசொலியில் வெளியிட்ட அறிவிப்பின்படியும், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102–வது பிறந்த நாளை முன்னிட்டு, தமிழர் நலன் காத்த அவரின் புகழ் பரப்பும் வகையிலும், கழகத் தலைவர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் தலைமையிலான திராவிட மாடல் அரசின் நான்காண்டு சாதனைகளை விளக்கியும், கழகப் பேச்சாளர்கள் மற்றும் இளம் பேச்சாளர்களைக் கொண்டு திருவாரூர் மாவட்டத்தில் உள்ள அனைத்து ஒன்றியம்–நகரம்–பேரூர்களில் நடைபெறும் தெருமுனைக் கூட்டங்களின் விவரம் வருமாறு :–

| வ. எண் | நாள் | ஒன்றியம் / நகரம் / பேரூர் | இடம் | பேச்சாளர்கள் |
|---|---|---|---|---|
| 1 | 01.07.2025 | திருவாரூர் ஒன்றியம் | தப்பளாம்புலியூர் ஊராட்சி | ஆரூர் மணிவண்ணன் தி.தினேஷ்பாபு |
| 2 | | திருவாரூர் நகரம் | ஐந்நூறு பிள்ளையார் கோயில் தெரு | ஆரூர் மணிவண்ணன் தி.தினேஷ்பாபு |
| 3 | | கொரடாச்சேரி தெற்கு ஒன்றியம் | முகந்தனூர், கடைத்தெரு. | ஆரூர் மணிவண்ணன் தி.தினேஷ்பாபு |
| 4 | 02.07.2025 | கொரடாச்சேரி வடக்கு ஒன்றியம் | கண்கொடுத்த வணிதம் | ஆரூர்.ஜோதி அ.தீன்ஷா நூஃப் |
| 5 | | கூத்தாநல்லூர் ஒன்றியம் | மேல கடைத்தெரு, மன்னார்குடி கிழக்கு | தஞ்சை விஸ்வா அ.தீன்ஷா நூஃப் |
| 6 | | கொரடாச்சேரி பேரூர் | வெட்டாற்றுபாலம் | தஞ்சை விஸ்வா அ.தீன்ஷா நூஃப் |
| 7 | 03.07.2025 | நன்னிலம் தெற்கு ஒன்றியம் | பூந்தோட்டம் கடைவீதி | குமரி பிரபாகரன் ரா.கனிமொழி |
| 8 | | நன்னிலம் வடக்கு ஒன்றியம் | கொல்லுமாங்குடி கடைத்தெரு | குமரி பிரபாகரன் ஆரூர்.ஜோதி ரா.கனிமொழி |
| 9 | | நன்னிலம் பேரூர் | சன்னாநல்லூர் பேருந்து நிலையம் | குமரி பிரபாகரன் ஆரூர்.ஜோதி ரா.கனிமொழி |
| 10 | | பேரளம் பேரூர் | பேரளம் கடைவீதி | குமரி பிரபாகரன் ஆரூர்.ஜோதி ரா.கனிமொழி |
| 11 | 04.07.2025 | குடவாசல் தெற்கு ஒன்றியம் | திருவிடச்சேரி, கடைவீதி | ஆடுதுறை உத்திராபதி தி.தினேஷ்பாபு |
| 12 | | குடவாசல் வடக்கு ஒன்றியம் | திருப்பாம்புரம் | ஆடுதுறை உத்திராபதி தி.தினேஷ்பாபு |
| 13 | | குடவாசல் பேரூர் | பேருந்து நிலையம் | ஆடுதுறை உத்திராபதி தி.தினேஷ்பாபு |
| 14 | 05.07.2025 | வலங்கைமான் மேற்கு ஒன்றியம் | ஆவூர் கடைத்தெரு | எஸ்.அகிலன் ரா.சிந்துநதி |
| 15 | | வலங்கைமான் கிழக்கு ஒன்றியம் | ஆலங்குடி கடைத்தெரு | எஸ்.அகிலன் ரா.சிந்துநதி |
| 16 | | வலங்கைமான் பேரூர் | மாரியம்மன் கோயில் எதிர்புறம் | எஸ்.அகிலன் ரா.சிந்துநதி |
| 17 | 06.07.2025 | மன்னார்குடி நகரம் | கடைத்தெரு, பந்தல் அடி. | குமரி பிரபாகரன் ரா.கனிமொழி |
| 18 | | மன்னார்குடி மேற்கு ஒன்றியம் | துளசேந்திரபுரம் | குமரி பிரபாகரன் ரா.கனிமொழி |
| 19 | | மன்னார்குடி மத்திய ஒன்றியம் | மேலவாசல் | குமரி பிரபாகரன் ரா.கனிமொழி |
| 20 | 07.07.2025 | நீடாமங்கலம் வடக்கு ஒன்றியம் | ஆதனூர் | ஆடுதுறை உத்திராபதி தி.தினேஷ்பாபு |
| 21 | | நீடாமங்கலம் தெற்கு ஒன்றியம் | சோனாபேட்டை | ஆடுதுறை உத்திராபதி தி.தினேஷ்பாபு |
| 22 | | நீடாமங்கலம் பேரூர் | பெரியார் அரங்கம் | ஆடுதுறை உத்திராபதி தி.தினேஷ்பாபு |
| 23 | 08.07.2025 | கோட்டூர் தெற்கு ஒன்றியம் | களப்பால் ஊராட்சி | நெய்வேலி விக்ரமன் அ.தீன்ஷா நூஃப் |
| 24 | | கோட்டூர் வடக்கு ஒன்றியம் | ஆதிச்சபுரம் ஆர்ச் | நெய்வேலி விக்ரமன் அ.தீன்ஷா நூஃப் |
| 25 | | முத்துப்பேட்டை பேரூர் | பேருந்து நிலையம் அருகில் | நெய்வேலி விக்ரமன் அ.தீன்ஷா நூஃப் |
| 26 | 14.07.2025 | திருத்துறைப்பூண்டி நகரம் | காமராஜர் சிலை அருகில் | ஆடுதுறை உத்திராபதி ஜெ.விக்னேஸ்வரி |
| 27 | | திருத்துறைப்பூண்டி ஒன்றியம் | கொற்கை தலைக்காடு | ஆடுதுறை உத்திராபதி ஜெ.விக்னேஸ்வரி |
| 28 | | முத்துப்பேட்டை ஒன்றியம் | இடும்பாவனம் ஊராட்சி | ஆடுதுறை உத்திராபதி ஜெ.விக்னேஸ்வரி |

திருவாரூர்

நாள் : 28.06.2025

கலைஞர் 100 1924 - 2023

